# குருஸ்துதி

அவதாரிகை

1. ஆத்மா இதுவல்ல இதுவல்ல என்று ஸ்தூல சூழ்மமான ரூபங்களை நீக்கிவிட்டு பிறகு கொள்ளவோ, தள்ளவோ எதுவுமில்லை எதை தனது சொரூபமாக, ஞானிகளானோர் தமதுள்ளத்தில் தாமகக் கொள்ளுவார்களோ, முதற்காரணமான உண்மையறிவின் இன்புருவாகிய அந்த பரவஸ்துவான பிரம்மம் நீயே.

2. யுத்தி என்னும் உலக்கையால் நன்கு குத்தி; உமியைப் போன்ற ஐந்து கோசங்களையும் கூர்ந்த மதியினால் ஆராய்ந்து அறிந்து அதை நீக்கி; அரிசியைக் கொள்ளுதல்போல, எந்தப் பொருளை ஞானிகள் தமது உள்ளத்தில் சாட்சாத்கரித்து இன்புறுவார்களோ அத்தகைய அழிவற்ற நித்திய சித்தமாயுள்ள வஸ்துவாகிய பிரம்மம் நீயே.

3. இந்திரியங்கள் என்னும் குதிரைகளுக்கு, விஷய போகங்களினால் ஏற்படக்கூடிய தோஷங்களை அறிவென்னும் சவுக்கால் அடித்து உணர்த்தி, அந்தர்முக கயிற்றால் இழுத்து, அந்த திடமான அறிவை ஞானிகள் எத்துடன் ஒன்றாய் பிணைத்திருப்பார்களோ அந்த அறியக்கூடிய பொருள்களுக்கெல்லாம் அதீதமாயுள்ள அப்பரவஸ்துவாகிய ஆத்மா நீதான்.

4. கோர்க்கப்பட்ட மலர்களுக்கு நூலானது எப்படி அவற்றிற்கு வேறாகப் பொருந்தியுள்ளதோ அதைப் போன்று கனவு, நனவு, தூக்கம் முதலான அவஸ்தைகளுக்கும் சாட்சியாய் இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் எந்த ஆத்மாவை ஞானிகள் உள்ளத்தில் தோய்வார்களோ; ஆதலும், அழிதலும் இல்லாத அந்த பரவஸ்து நீதான்.

5. கங்கணம், கிரீடம் முதலான ஆபரணங்கள் யாவும் தங்கத்தின் வடிவமேயாகுதல் போல உலகமெல்லாம் சித் சொரூபமேயாகும். சற்றும் வேறுபாடின்றி பிரகாசிக்கும் என்று வேதமானது எந்த தத்துவத்தைச் சொல்கின்றதோ அந்த ஆதியோ, நடுவோ, முடிவோ இல்லாத பரவஸ்து நீதான்.

ஸ்ரீ

# குருஸ்துதி

(அறுசீர்விருத்தம்)

நேதிநே தியாதி வாக்கா னிடேதித்து மூர்த்தா மூர்த்த
மேதுமே தள்ளற் கில்லா வெதைச்சுவ சொரூப மாக
வோதருஞ் சாது வானோ ருள்ளத்திற் கொள்ளு வார்க
ளாதிமெய் யறிவா னந்த வவ்வத்து வன்றோ நீதான். 1

உத்தியாங் குத்தி னூலே யுமியெனு மைந்து கோசம்
புத்தியாற் பிரித்துப் பின்னர்ப் பொருந்திடு மரிசி போலு
மெத்தினைச் சத்துக் கள்கண் டிதயத்தி லனுப விப்ப
ரத்தமி னித்த சித்த வவ்வத்து வன்றோ நீதான். 2

பொறிகளாம் பரிக டம்மைப் புலன்களில் விளங்குந் தோட
வறிவெனுங் கசைய டித்தே யகமுகக் கயிற்று லீர்த்தவ்
வறிவறி யறிஞ ரெத்தி லணைத்தொன்றுப் பிணித்தி ருப்ப
ரறிபொருட் கதீத மான வவ்வத்து வன்றோ நீதான். 3

பூக்களி னின்று வேறாய்ப் பொருந்திடுஞ் சூத்தி ரம்போற்
சாக்கிர மாதி யான சருவத்தும் வேற தான
சாக்கியா நோக்கி யாதைச் சத்துக்க ளகத்த ணைவ
ராக்கமு நீக்க மில்லா வவ்வத்து வன்றோ நீதான். 4

கடகமகு டாதி யாவுங் கனகமே யாகு மாபோற்
சடசித்தா முலகம் யாவுஞ் சற்றுமே பின்ன மின்றிச்
சுடருமவ் வடிவா யென்று சொற்றிடும் வேதம் யாதை
யடிநடு முடிவில் லாத வவ்வத்து வன்றோ நீதான். 5

6. சூரியனுள்ளும், சரீரத்தினுள்ளும் பிரகாசிப்பவன் ஒருவனாகிய நானே என்று எப்பொழுதும் வேதவித்துக்களானோர் ஊக்கமுடன் இனிமையாய் எந்த தத்துவத்தை நன்றாக எடுத்து உபதேசிக்கிறார்களோ, குற்றமற்ற மெய்யறிவான அந்த பரவஸ்து நீதான்.

7. உள்ளத்தில் சிரத்தையுடன் உபாசித்தும்; வாக்கினாலே வேதங்களை ஓதியும்; தவம், யாகம், தானம் முதலான தர்மானுஷ்டங்களை செய்தும் வேத விற்பன்னர்கள் எந்த பரவஸ்துவை அறிந்து கொள்வதில் ப்ரீதி உடையவராக இருக்கிறார்களோ; வேதங்களின் முழுமுதற் பொருளாய் நிற்கும் அந்த பரவஸ்து நீதான்.

8. சமம், தமம், உபரதி, சாந்தி முதலான சாதனங்களினால் மனம் தூய்மையடைந்து, தன்னாலே தனக்குள்ளே எப்போதும் விசாரித்து அறிஞராயுள்ளவர் எந்த பொருளை சாட்சாத்காரமடைந்து என்றும் இந்த சம்சாரத்தை நீக்கி செய்ய வேண்டியதையெல்லாம் செய்து முடித்தவராய்ப் பிரகாசிப்பாரோ அத்தகைய ஆழ்ந்து அறியக்கூடிய உண்மைப் பொருளான பரவஸ்து நீதான்.

*இனனிலித் தனுவில் யானு யிலங்குவ னேக னேயென்*
*றனிசமும் வேத வாதி யாயினோர் முயற்சி யோடு*
*மினிமையா யெடுத்து ரைப்ப ரெத்தத்து வத்தை நன்று*
*யனர்த்தமி லெதார்த்த மான வவ்வத்து வன்றோ நீதான். 6*

*அருமறை வாக்கி னாலே யகத்தினிற் சிரத்தை யோடு*
*மருந்தவம் யாகந் தான மாதிநல் லறங்க ளாலே*
*யருமறை யவர்க ளெத்தை யறிந்திட வவாவு கின்றா*
*ரருமறைப் பொருளாய் நின்ற வவ்வத்து வன்றோ நீதான். 7*

*சாந்திமுத லான வுற்றுச் சந்ததந் தன்னுற் றன்னி*
*லாய்ந்தெதை யறிஞர் கண்டவ் வறிவின்ப மெய்யா யென்று*
*மீந்தெலா முடித்தொ ளிர்வர் மிகுபவக் கேத நீத்தே*
*யாழ்ந்தறி தத்வ மான வவ்வத்து வன்றோ நீதான். 8*